



- வாழ்வோம்

மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்குத் திட்டமிட்டுத் திணிக்கப்பட்ட இடைத்தேர்தல் நடக்கிறது. அ.தி.மு.க.வில் இருந்து போட்டியிட்டு வெற்றிபெற்ற மரகதம்குமரவேல், சத்யபாமா ஆகியோர், ஒரே மாதத்திற்குள் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, த.வெ.க.வில் ஐக்கியமானதால், இந்த இடைத்தேர்தல் நடக்கிறது. அக்டோபர் 6-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட அனைத்துக் கட்சிகளின் வேட்பாளர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் உள்ளனர்.

## துரோகிகளுக்குப் பாடம் புகட்டும் மக்கள்!

கடந்த சட்டமன்றத் தேர்தலைப் போல இன்ஸ்டாகிராமில் ரீல்ஸ்களை அள்ளிவிட்டு, வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று எண்ணியிருந்த த.வெ.க.விற்கு, களத்தில் மக்கள் சரியான பாடம் புகட்டி வருகிறார்கள். த.வெ.க. வேட்பாளர்கள் செல்லுமிடங்களில் எல்லாம் பொதுமக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது.

``சுயநலனுக்காக எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு, நீங்கள் கட்சி தாவியதால்தான் இடைத்தேர்தல் வந்திருக்கிறது. விரலில் வைத்த மை அழிவதற்குள் கட்சி தாவிய நீங்கள், மீண்டும் வந்து எங்களைச் சந்திக்கக் கூச்சமாக இல்லையா? கட்சி தாவியதால், நீங்கள் அடைந்த ஆதாயம் என்ன? வாக்களித்த மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டு, எந்த முகத்தை வைத்துக்கொண்டு மீண்டும் ஓட்டுக் கேட்டு வருகிறீர்கள்?" என்று த.வெ.க. வேட்பாளர்கள் செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் கேள்விகளால் துளைத்தெடுக்கிறார்கள். பதில் சொல்ல முடியாமல் த.வெ.க. வேட்பாளர்கள் தலைதெறிக்க ஓடும் வீடியோக்கள் இணையத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

`ரீல்ஸ் ஆட்சி'யின், ரியல் முகத்தை நான்கே மாதங்களில் மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள் என்பதை இடைத்தேர்தல் களம் உணர்த்திக்கொண்டிருக்கிறது.

# நெருக்கடி நிலையும் அம்பலமான சூழ்ச்சிகளும்!

1977-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம். நெருக்கடி நிலை தளர்த்தப்பட்டுக் கொண்டிருந்த நேரம். பிப்ரவரி 6-ஆம் தேதி, 'தினமணி' ஏடு சில கேள்விகளை எழுப்பி இருந்ததை 'நெஞ்சுக்கு நீதி'யில் பதிவுசெய்துள்ளார் கலைஞர். பத்துப் பிரிவுகளாகப் பிரித்து, அந்த ஏடு எழுப்பிய கேள்விகளுக்கான விடை மிக முக்கியமானது' என்கிறார். ஏனென்றால், அந்தக் கேள்விகளுக்கும் 'சர்க்காரியா கமிஷன்' அமைக்கப் பட்டதற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. அதாவது, 'சர்க்காரியா கமிஷன்' என்பது தனித்த ஒன்றல்ல, அது கழக ஆட்சிக் கவிழ்ப்புடன் தொடர்புடையது என்பதுதான் மிக மிக முக்கியமானது.


ஓவியம் : ரவி பேலட்

அந்தக் கேள்விகளின் சாரம் என கலைஞர் குறிப்பிடுபவை:

1. தி.மு.க.வில் இருந்து எம்.ஜி.ஆர். விலகல் அல்லது விலக்கம் 1972 அக்டோபர் 10.

2. தி.மு.க. அமைச்சர்கள்மீது குடியரசுத் தலைவருக்குப் புகார் மனு அனுப்பப்பட்டது, 1972 நவம்பர்.

3. அந்தப் புகார் மனு குறித்து விளக்கம் கூறும்படி, ஒன்றிய அரசு தமிழக முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியது, 1972 நவம்பர் 15.

4. தமிழக முதல்வர் (கலைஞர்) டில்லிக்குப் பதில் அனுப்பிய நாள், 1972 டிசம்பர் 14.

5. புகார் அனுப்பியவர்களின் எதிர் உரை டில்லிக்கு அனுப்பப்பட்டு, அதை ஒன்றிய அரசு முதல்வருக்கு அனுப்பியது, 1973 பிப்ரவரி 17.

6. எதிர் உரைக்குத் தமிழக முதல்வர் பதில் அனுப்பியது, 1973 மே 28.

7. குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்தது, 1975 ஜூன் 25.

8. நெருக்கடி நிலையை எதிர்த்து, தி.மு.க. தீர்மானம் இயற்றியது, 1975 ஜூன் 27.

9. காமராஜர் மரணம், 2.10.1975.

10. தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியில், 1972-இல் சமர்ப்பித்த புகார்மீது விசாரணைக்கு உத்தரவு இடப்பட்டது, 1976 பிப்ரவரி.

என அந்தக் கேள்விகளைப் பட்டியலிட்ட கலைஞர், அரசின்மீது புகார் பெறப்பட்ட பின்னர், 'விசாரணைக்காக ஏன் இரண்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்?' எனக் கேள்வி எழுப்பினார். அதாவது, 'நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட 25.06.1975-க்கு முன்னரோ, பெருந்தலைவர் காமராஜர் இயற்கை எய்திய 02.10.1975-க்கு முன்னரோ அந்தப் புகார்கள்மீது விசாரணை நடத்தி இருக்கக் கூடாதா... எது குறுக்கிட்டது?' என அறிக்கைகள் வழி கேள்வி எழுப்பினார்.

அதற்குக் காரணம், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், கழக ஆட்சியை இந்திரா காந்தி கலைப்பதற்குக் குறுக்கே நின்றார். 'மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கலைப்பது ஜனநாயகமல்ல' என்று இந்திரா காந்திக்குச் செய்தி அனுப்பிக்கொண்டிருந்தார். அதனால் இந்திரா காந்தி, கழக ஆட்சியைக் கலைத்திட அஞ்சினார். காமராஜர் மறைந்த பிறகு, இந்திரா காந்திக்கு கழக ஆட்சியைக் கலைத்திட குறுக்கே இருந்த தடை நீங்கிவிட்டது. இந்த உண்மையைத்தான் 'தினமணி' கேள்விகள் வாயிலாக விளக்கியிருந்தது. அதாவது, காமராஜர் இருந்தவரை ஆட்சியைக் கலைக்கவில்லை. அவர் மறைந்த பிறகு கழக ஆட்சியைக் கலைத்துவிட்டு, அவர் நினைவாகக் கழக அரசு அமைத்திருந்த நினைவு மண்டபத்தையும் இந்திரா காந்தி அம்மையார் திறந்துவைத்தார்.

## 75 கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!**

### தி.மு.க. - ஜனதா தேர்தல் உடன்பாடு

தவிர, சர்க்காரியா கமிஷன் அறிக்கையின் ஒரு பகுதி வெளிவந்ததும் சாதாரணமாக இல்லை. 1977-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு, தி.மு.க. - ஜனதா உடன்பாடு ஏற்பட்டபோதுதான் அந்த அறிக்கை கசியவிடப்பட்டது. குறிப்பாக, 1977 பிப்ரவரி 15-ஆம் தேதி, தி.மு.க. - ஜனதா கட்சித் தேர்தல் உடன்பாடு ஏற்பட்டிருந்ததால், பிப்ரவரி 16-ஆம் தேதி, சர்க்காரியா கமிஷன் முதல் அறிக்கையை வெளியிட்டு, தி.மு.க. முன்னாள் அமைச்சர்மீது வழக்குகளைத் தொடரச் செய்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார் கலைஞர். அதற்குக் காரணம், தேர்தல் நேரத்தில் பொதுமக்களிடம் கழகத்தைப் பற்றிய அவதூறு பரப்ப வேண்டும் என்கிற நோக்கம்தான். ஆனால், மொத்த வழக்குகளையும் நீதிமன்றத்தில் சந்தித்துக்கொண்டே தேர்தல் களத்திலும் ஈடுபட்டது கழகம்.

கலைஞரும் கழகமும் செய்த குற்றமெல்லாம் ஜனநாயகத்தைக் காப்பாற்ற அவசரநிலைப் பிரகடனத்தைத் திரும்பப்பெற வேண்டும் என அழுத்தம் கொடுத்ததுதான். முக்கியமாக, 'சர்க்காரியா கமிஷன்' விசாரணையின்போது, ஒன்றிய அரசு, தனக்குள்ள செல்வாக்கை வைத்து அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து, வாக்குமூலங்களை வாங்கியது. கடந்த வாரம் பார்த்த டிராக்டர் வழக்கு போலவே, ஐ.ஏ.எஸ். அதிகாரி இராயப்பா என்பவர் அளித்த வாக்குமூலம் குறித்த உண்மையும் பின்னாட்களில் தெரியவந்தது.

### ரெடிமேட் வாக்குமூலம்

கழக ஆட்சிக்காலத்தில், 1971-இல் நடைபெற்ற பொதுத்தேர்தலுக்குப் பிறகு, தலைமைச் செயலாளராக இருந்த அவரை, பதவி மாற்றம் செய்து வேறு ஒரு பொறுப்புக்கு நியமித்ததால், அதனை எதிர்த்து அவர், கலைஞர் மீது வழக்குப் போட்டவர். அதை நினைவில் வைத்துக்கொண்டு, அவரைக் கொண்டு சர்க்காரியா கமிஷனில் வாக்குமூலம் பெறலாமென்று, ஒன்றிய அரசு அதிகாரிகள் முயற்சி செய்தனர். அவர் அளித்திருந்த வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் பூச்சிமருந்து தெளிப்பு தொடர்பான வழக்கு, வீராணம் திட்டம் தொடர்பான வழக்குகள் கட்டமைக்கப்பட்டன.

இந்த நிலையில்.. வழக்கு விசாரணையின் போது 21.02.1977 அன்று, அவருக்கு அனுப்பப்பட்ட நோட்டீஸின்படி முன்பு அவர் அளித்திருந்த வாக்குமூலம், தானாகவே முன்வந்து அளித்ததா அல்லது அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட 'ரெடிமேட்' வாக்குமூலத்தில் கையெழுத்திட்டாரா, வற்புறுத்தல், ஆசை காட்டல் ஏதாவது உண்டா? எனக் கேட்கப் பட்டிருந்தது.

அதற்கு, அவர் அளித்த விரிவான பதிலை 'நெஞ்சுக்கு நீதி'யில் தனி அத்தியாயமாகவே எழுதி இருக்கிறார் கலைஞர். அதில் குறிப்பிட்டுள்ளது என்னவென்றால், சி.பி.ஐ. அதிகாரிகள் அவரைச் சந்தித்து, கலைஞருக்கும் அமைச்சர்களுக்கும் எதிராக வாக்குமூலம் அளிக்குமாறு முயன்றுள்ளனர். ஏற்கெனவே தயாரித்து வந்த 'ரெடிமேட்' வாக்குமூலத்தில் அவர் கையெழுத்திட மறுத்துள்ளார். தயாரிக்கப்பட்ட வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டால், எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்று உறுதி அளித்ததாகவும், ஓய்வூதியம் மற்றும் பிற சலுகைகள் கிடைக்க வழிவகை செய்யப்படும் என்றும் ஆசை காட்டியுள்ளனர்.


என்னைப் பதவி மாற்றம் செய்துவிட்டதால், எல்லோரும் அவருக்கு எதிராக நான் வாக்குமூலம் கொடுப்பேன் என்று எதிர்பார்த்ததாகவும்; முதலில் நான் கொடுத்திருந்த வாக்குமூலம், விசாரணை தரப்பிற்கு உதவும் வகையில் இல்லையென்றும் என்மீது கோபம் கொண்டனர். அதே நேரத்தில், தான் முன்பு அளித்த வாக்குமூலத்தின் பெரும்பகுதி மாற்றப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். அவ்வாறு தனக்கு அழுத்தம் கொடுத்த சில அதிகாரிகள் பெயரையும் அப்போது அவர் அம்பலப்படுத்தினார். கட்டமைக்கப்பட்ட ஒரு பொய், அடுத்த ஓராண்டிற்குள்ளாகவே வெளிச்சத்துக்கு வந்தது.

...தொடரும்

● தமிழ்.கா.அமுதரசன் ●

## ஃப்ளாஷ்பேக்

### நெஞ்சிலிருந்து அகலாத படம்!



2017-ஆம் ஆண்டு இறுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, அவர் மருத்துவ ஓய்வில் இருந்த நாட்களில் பார்த்தபோது எடுத்த படம். என் வாழ்நாள் ஆசை மற்றும் கனவுகளில் ஒன்று, தலைவருடன் படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான். அந்த ஏக்கம், அவரது ஓய்வுக்காலத்தில்தான் அமைந்தது. எங்கள் குடும்பமே கழக ஆதரவுக் குடும்பம். இந்தப் படமும் நினைவுகளும் என் நெஞ்சிலிருந்து என்றும் அகலாதவை.


வெங்கடேஷ் ஆறுமுகம்

**- வெங்கடேஷ் ஆறுமுகம், நடிகர் மற்றும் சின்னத்திரைக் கலைஞர், மதுரை.**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## தெரிந்து கொள்வோம்

**17.04.1970**

**சேலம் உருக்காலைத் திட்டம்!**

அன்று, சேலம் உருக்காலைத் திட்டம் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டு, 16.09.1970 அன்று பிரதமர் இந்திரா காந்தியும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞரும் இணைந்து, ஆலை அமைக்க அடிக்கல் நாட்டினர்.




Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900